தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com

**9 வயதுப்பிரிவு**
(01.01.2007 – 31.12.2007 வரையில் பிறந்தோர்)

# அழகான எம் தாயகம்

எங்கள் தாயகம் தமிழீழம். அது ஓர் அழகான தேசம். அதனால் தான் "தமிழீழத்தின் அழகு தனியழகு" என்றார் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன். இந்து சமுத்திரக் கரையோரம் அணைத்திருக்கும் அழகிய கப்பல் போன்றது எங்கள் தமிழீழ தேசம்.

மூன்று பக்கம் நீராலும் ஒரு பக்கம் நிலத்தாலும் சூழப்பெற்றுள்ளது எம் தாயகம். ஈழத்தின் வடக்கும் கிழக்கும் அதனை அண்டிய பகுதிகளும் நாம் பரம்பரை பரம்பரையாக ஆண்டுவந்த நிலமாகும். வளம் மிக்க கடலும் நிலமும் நன்னீரும் எமது சொத்துக்கள். செந்தமிழ் எங்கள் தாய்மொழி.

பன்னெடுங்காலமாகத் தனித்துவமான பண்பாடுகளுடன் கலையையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாக்கின்ற தமிழினம் தன்னிறைவுடன் வாழ்ந்து வந்த தேசமிது. பழமைப் பற்றோடு புதுமையை வரவேற்பதில் பின் நிற்காத மக்கள் வாழும் தாயகம் தமிழீழம் என்றால் அது மிகையல்ல.

கல்விச்சாலைகளும் கலைக்கூடங்களும் அருள் வழங்கும் ஆலயங்களும் இங்கு நிறைந்துள்ளன. குளங்களும் கால்வாய்களும் பரந்த விளைநிலங்களும் பசுமையான சோலைகளும் காடுகளும் துறைமுகங்களும் எங்கள் தாயகத்தின் அழகுக்கு அணி சேர்ப்பவை. பல்துறைசார் அறிஞர்களையும் கலைஞர்களையும் நாட்டுப்பற்றாளர்களையும் எமக்களித்த தாய்ப்பூமி இது.

நிமிர்ந்து நின்ற எம் தேசம், பகைவன் கால்பட்டு வதைபடுவதைக் காணத் தாங்காது, உணர்வுடன் எழுந்தவர் தலைவர் மாமா. முப்படை கொண்டு தமிழர் பரம்பரை வீரத்தின் உச்சத்தை வையகம் வியக்கும் வண்ணம் காட்டியவர் அவரே. எங்கள் அன்புக்குரிய தலைவர் மாமாவைப் பெற்றுத்தந்து, பெருமை கொள்ளும் பேராற்றல் நிறைந்த தமிழீழம், அழகின் உறைவிடமே. தமிழீழ விடுதலைக்காகத் தம் இன்னுயிர் தந்த மாவீரர்களை ஈன்றெடுத்த கருவறை! இந்த மானமறவர்களைத் தனக்குள்ளே தாங்கி நிற்கும் வீரத்தாய்மடி!

பேரினவாதம் எனும் பெரும்புயல் வீசி எம் தேசத்தை இன்று சூறையாடிற்று. அழகான எம் தாயகம் மீண்டும் பொலிவு பெற வேண்டும். எம் தேசியக்கொடி விடுதலை பெற்ற தமிழீழ தேசத்தில் பட்டொளி வீசிப் பறக்க வேண்டும். தலைவர் மாமாவின் வழிகாட்டலும் மாவீரர்களின் தியாகமும் எம்மை வழிநடத்த, அழகிய எம் தாயகம் மீட்க நம்பிக்கையோடு உழைப்போம்.

நன்றி

வணக்கம்.